மகளிர் திட்டம் – மணிமேகலை விருதுகள் – 2007–08 – 10 சிறந்த சுய உதவிக்குழுக்கள் மற்றும் 5 ஊராட்சிஅளவிலான கூட்டமைப்புகள் தேர்ந்தெடுத்தல்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மஅதி.3.) துறை

அரசாணை (நிலை) எண். 171 நாள்: 11.11.2008

படிக்கப்பட்டவை:-

1. அரசாணை (நிலை) எண். 172, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மஅதி2) நாள் 24.11.2006.
2. அரசாணை (நிலை) எண். 123, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மஅதி2) நாள் 9.2.2007.
3. தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டுக் கழக மேலாண்மை இயக்குநரின் நேர்முகக் கடித எண். 1080/டி1/2008, நாள் 6.11.2008.

******

**ஆணை:**

மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டுக் கழகம் அவர்கள், மகளிர் திட்டத்தினை சீரிய முறையில் செயல்படுத்துவதில் பங்குகொள்வதை ஊக்குவிப்பதற்காக மாநில அளவில், மிகச் சிறந்த ஐந்து ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கும், 10 மிகச் சிறந்த சுய உதவிக் குழுக்களுக்கும் மற்றும் மாவட்ட அளவில் ஒரு சிறந்த ஊராட்சி அளவிலான கூட்டமைப்புக்கும் 3 சிறந்த சுய உதவிக்குழுக்களுக்கும் 'மணிமேகலை விருதுகள்' வழங்க இரண்டாவதாகப் படிக்கப்பட்டட அரசாணையில் ஆணையிடப்பட்டுள்ளது என்றும், இந்த விருதிற்கு தேர்வு செய்வதற்கான விரிவான வழிமுறைகள் முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணையிடப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

2. தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டுக் கழக மேலாண்மை இயக்குநர், மாவட்ட குழுக்களிடமிருந்து மாநில அளவிலான விருதுக்காக, 27 சிறந்த ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் கருத்துருக்கள் பெறப்பட்டன எனவும், அவை தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு ஆணைய கூடுதல் இயக்குநர்களால் கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டன. மாநில அளவிலான தேர்வுக் குழு 20.10.2008 அன்று கூடி மாவட்டக் குழுக்களிடமிருந்து பெறப்பட்ட 27 கருத்துருக்களை கள ஆய்வு அறிக்கையின் அடிப்படையில் ஆய்வு செய்தது எனவும், அவ்வாய்வின் அடிப்படையில் மாநிலக் குழு 2007–2008ம் ஆண்டிற்கான மாநில விருதிற்கான ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் பட்டியல் ஒன்றை தயாரித்துள்ளதாகவும், அவ்வாறே மாவட்ட குழுக்களிடமிருந்து மாநில அளவிலான விருதுக்காக 28 சிறந்த சுய உதவிக் குழுக்களின் கருத்துருக்கள் பெறப்பட்டது என்றும் , அவை மாநில தேர்வுக் குழுவினால் 23.10.2008 அன்று பரிசீலிக்கப்பட்டு அவற்றில் 23 சுய உதவிக் குழுக்கள் மேலாய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது எனவும், அனைத்து 23 சுய உதவிக்குழுக்களும் தங்களது செயல்பாடுகளை மாநில அளவிலான தேர்வுக்குழு முன் 31.10.2008 அன்று சமர்ப்பித்தன எனவும் அவைகள் சமர்ப்பித்த ஆவணங்களை சரிபார்த்த பின் 2007–08ற்கான மாநில அளவிலான மணிமேகலை விருதிற்கான சுய உதவிக்குழுக்களின் பட்டியல் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டுக் கழக மேலாண்மை இயக்குநர் தெரிவித்து மேற்கூறியுள்ள பட்டியலில் இருந்து 5 சிறந்த ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மற்றும் 10 சிறந்த மகளிர் சுய உதவிக் குழுக்களை மாநில அளவிலான மணிமேகலை விருது பெறுவதற்கு தேர்வு செய்யுமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டுக் கழக மேலாண்மை இயக்குநர் அனுப்பிய மேற்கூறிய கருத்துருவினை அரசு மிகவும் கவனமாக பரிசீலனை செய்து, தகுதியின் அடிப்படையில் கீழ்கண்ட ஐந்து ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளையும், பத்து சுய உதவிக் குழுக்களையும் 2007–08ம் ஆண்டிற்கான மணிமேகலை விருது பெறுவதற்கு தகுதியானவை என்று தேர்வு செய்து ஆணையிடுகிறது.

**அ) விருது பெறத் தகுதி வாய்ந்த சிறந்த ஐந்து ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள்**

| வ. எண். | மாவட்டம் | ஒன்றியத்தின் பெயர் | ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் பெயர் |
|---|---|---|---|
| 1. | திருவாரூர் | மன்னார்குடி | திருராமேஸ்வரம் |
| 2. | காஞ்சிபுரம் | காட்டான்குளத்துார் | ஊரப்பாக்கம் |
| 3. | நீலகிரி | குன்னூார் | ஜெகத்தலா |
| 4. | திண்டுக்கல் | ஆத்துார் | என்.பஞ்சம்பட்டி |
| 5. | விருதுநகர் | சாத்துார் | படந்தல் |

**ஆ) விருது பெறத் தகுதி பெற்ற சிறந்த பத்து சுய உதவிக்குழுக்கள்**

| வ. எண். | மாவட்டம் | ஒன்றியத்தின் பெயர் | சுய உதவிக்குழுவின் பெயர் |
|---|---|---|---|
| 1. | வேலுார் | ஜோலார்பேட்டை | செம்புங்கனுார் – 3 |
| 2. | கடலுார் | காட்டுமன்னார்கோயில் | எழில் நாட்டார்மங்கலம் –7 |
| 3. | திண்டுக்கல் | கொடைக்கானல் | சமத்துவம் |
| 4. | நாமக்கல் | எலச்சிப்பாளையம் | சின்ன எலச்சிப்பாளையம் –1 |
| 5, | நீலகிரி | உதகமண்டலம் | ஈஸ்வரர் |
| 6. | தருமபுரி | பென்னாகரம் | மகாத்மா காந்தி |
| 7. | துாத்துக்குடி | உடன்குடி | கற்பகத்தரு |
| 8. | ஈரோடு | அந்தியூர் | அன்னை தெரசா |
| 9. | சேலம் | வீரபாண்டி | சுடர் மகளிர் மேம்பாட்டு சங்கம் |
| 10. | தேனி | சின்னமனுார் | அன்னை தெரசா |

4. மணிமேகலை விருதுகள் வழங்கப்படும் இடம் மற்றும் நாள் விபரங்கள் பின்னர் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவன நிர்வாக இயக்குநரால் தனியாக அறிவிக்கப்படும் என்றும் அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**க. அஷோக் வர்தன் ஷெட்டி,**
அரசு முதன்மைச் செயலாளர்.